## உங்கள் வியாபாரத்துக்கு சமூகங்கள் ஏன் முக்கியமானது?



சுற்றுலாவில் தொழில் வாய்ப்புகள் ஏற்படுத்தப்படுவதால் சமூகங்களுக்கு பயனளிப்பதாக அமைந்திருக்கும். தமது பிரதேசத்தைச் சேர்ந்தவரை பணிக்கு இணைத்துக் கொள்வதால் வியாபாரங்களுக்கு தங்குமிடம் வழங்கல் மற்றும் போக்குவரத்து செலவுகளை சேமித்துக் கொள்ள முடியும்.



உள்நாட்டு சமூகங்களுடன் பணியாற்றுவதனூடாக, பிரயாணிகளுக்கு மேம்படுத்தப்பட்ட இலங்கையின் பிரத்தியேக அனுபவத்தைப் பெற்றுக் கொடுக்க முடிவதுடன், நீடித்திருக்கும் நினைவுகளையும் வியாபாரங்களினால் வழங்க முடியும்.



உள்நாட்டு சமூகங்களுடன் உறுதியான உறவுகளை கட்டியெழுப்பல் மற்றும் நம்பிக்கையை வென்றிருப்பதனூடாக, முறுகல் நிலைகளை தவிர்த்துக் கொள்ளலாம் என்பதுடன், நிலைபேறாண்மையை நோக்கிய ஒன்றிணைந்த செயற்பாடுகளை மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும்.



உள்நாட்டு வியாபாரங்கள் தம்மை சூழவுள்ள சமூகத்தாருடன் கைகோர்க்கும் போது, எதிர்பாராத சவால்கள் எழும் போது அல்லது வெளியிலிருந்து தடங்கல்கள் ஏற்படும் போது அவற்றுக்கு முகங்கொடுக்கவும், மீள்வதற்கும் உதவியாக அமைந்திருக்கும். உதாரணமாக, உங்களுக்கு தேவையான மூலப்பொருட்கள் மற்றும் பணியாளர்களை சூழவுள்ள பகுதியிலிருந்து பெறுவதனூடாக, எரிபொருள் பிரச்சனைகள், விநியோக தொடர்களில் பாதிப்பை ஏற்படுத்தும் விடயங்கள் தொடர்பான சிக்கல்களை தவிர்த்துக் கொள்ள முடியும்.

## சமூகங்களுக்கு ஆதரவளிக்க உங்களால் மேற்கொள்ளக்கூடிய இதர செயற்பாடுகள்

- உங்கள் சமூகத்தை சேர்ந்தவர்கள் சிறுவர் பாதுகாப்பு மற்றும் மனித கடத்தல் தொடர்பில் பயிற்சிகளைப் பெற்றிருப்பதை உறுதி செய்யவும்.
- உள்நாட்டு சமூகங்களுக்கு அனுகூலமளிக்கக்கூடிய உட்கட்டமைப்பு, கல்வி மற்றும் இதர அம்சங்களில் முதலீடு/ பங்களிப்பு செய்யவும்.
- சுற்றுலாப் பயணிகளுடன் எவ்வாறு தொடர்புகளை பேணுவது மற்றும் தமது தயாரிப்புகளை எவ்வாறு சந்தைப்படுத்துவது தொடர்பில் சிறு வியாபாரங்கள் மற்றும் விற்பனையாளர்களுக்கு பயிற்சிகளை வழங்கவும்.

சமூக ஈடுபாட்டு கொள்கையை நடைமுறைப்படுத்துவது என்பது பல வழிகளில் கைகொடுக்கும். அதில் ஒன்றாக கீர்த்தி நாமத்தைக் குறிப்பிடலாம். நஷனல் ஜோகிராபிக் சஞ்சிகையில் "சமூக சுற்றுலா என்பது, மாற்றத்தை ஏற்படுத்த எதிர்பார்க்கும் சுற்றுலா பிரயாணிகள் மத்தியில் பெருமளவு தாக்கத்தை ஏற்படுத்தும்" என குறிப்பிடப்பட்டுள்ளது.

### மேலும் அறிந்து கொள்வதற்கு

Top 20 Community Engagement Ideas for Your Business – Complete Guide

8 ways Responsible Tourism benefits local communities


**நீங்கள் இல்லை என்றால், யார்?இன்றே செயல்படுங்கள் 👉 நிலைத்தன்மையை சிந்தியுங்கள் 🌎**


USAID Indo-Pacific Opportunity Project (IPOP)
International Development Group LLC

56/6A Horton Place
Colombo 7, Sri Lanka
Tel: 94-112697052


USAID
FROM THE AMERICAN PEOPLE

# சமூகங்களுக்கு ஆதரவளிப்பதற்கு உங்களால் என்ன செய்ய முடியும்



USAID
FROM THE AMERICAN PEOPLE

# சமூகங்களை ஆதரிக்க என்ன செய்யலாம்

1. உங்கள் உள்ளூர் சமூகத்திலிருந்து கிடைக்கும் உள்ளூர் மூலப்பொருட்களைப் பயன்படுத்தி உணவுப் பொருட்கள் மற்றும் உணவுகளின் பெயர் பட்டியலை உருவாக்கவும்

2. உங்கள் சுற்றுலா பயணிகள் தங்கள் பயணத்தின் போது உள்ளூர் சமூகம் மற்றும் கலாச்சாரம் இரண்டையும் மதித்து எவ்வாறு பொறுப்புடன் செயல்படுவது என்பது பற்றிய தகவலை வழங்கவும்

3. கட்டிடம் மற்றும் உள்துறை வடிவமைப்பிற்கு உள்ளூர் பொருட்களைப் பயன்படுத்துவதன் மூலம் உள்ளூர் கலாச்சாரத்தின் தனித்துவமான அம்சங்களைக் கொண்டாடவும் மற்றும் ஊக்குவிக்கவும்

4. உங்கள் சமூகத்தில் உள்ள அனைத்து உல்லாசப் பயணங்களையும் நேரடியாக அனுபவியுங்கள், இதன் மூலம் உங்கள் வாடிக்கையாளர்களுக்கு நம்பிக்கையுடன் ஆலோசனைகள் / பரிந்துரைகளைச் செய்யலாம்

5. உங்கள் சுற்றுலா வணிகத்தில் புதிய ஆட்சேர்ப்புகளுக்கு உள்ளூர் சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை கொடுங்கள்

6. உங்கள் பகுதியில் உள்ள உள்ளூர் சங்கங்களின் உறுப்பினர்களாகுங்கள், உங்கள் சமூகத்தில் உள்ள சமூக சவால்களுக்கு நிலையான தீர்வுகளை பரிந்துரைக்கவும்



Booking.com இன் ஆய்வின்படி 66% சுற்றுலா பயணிகள் உள்ளூர் கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கும் உண்மையான அனுபவங்களைப் பெற விரும்புகிறார்கள்.

சுற்றுலாத் துறையில் உள்ள ஒவ்வொரு வேலையும் 1.63 பிற வேலை வாய்ப்புகளை அவ்விடத்தில் உருவாக்கும்.

2021 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஆய்வில், Booking.com உடன் இணைந்துள்ள 66% தங்குமிட வழங்குநர்கள், நிலைத்தன்மையால் உள்ளூர் சமூகங்களிற்கு நல்ல தாக்கத்தை ஏற்படுத்துவதாக நம்புகின்றனர்.